10841

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**85 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## மனைப் பொருளியல் I

**அறிவுறுத்தல்கள்:**

※ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

※ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

※ உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உங்கள் விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (×) இடுக.

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பின்வருவனவற்றில் குளுற்றனின் மற்றும் அவிடின் ஆகிய புரதங்கள் முறையே அடங்கிய உணவுச் சோடி எது?
(1) அரிசி மற்றும் பால் (2) மீன் மற்றும் சோளம்
(3) கோதுமை மற்றும் முட்டை (4) பால் மற்றும் இறைச்சி

**2.** பின்வருவனவற்றில் விற்றமின் A, ரெற்றினோலாக அடங்கியுள்ள உணவு வகை எது?
(1) மீன் (2) கரட் (3) பொன்னாங்காணி (4) மாம்பழம்

**3.** முறையே பருப்பு மற்றும் எண்ணெய் வித்து ஆகியன அடங்கியுள்ள உணவுச் சோடி எது?
(1) பயறு மற்றும் போஞ்சி (2) நிலக்கடலை மற்றும் பருப்பு
(3) உளுந்து மற்றும் தேங்காய் (4) சிறகவரை மற்றும் மரமுந்திரிகை

**4.** பின்வரும் கனியுப்புகளைக் கருதுக.
A - அயடின் B - குளோரின் C - புளோரைட்
மேற்குறிப்பிட்டவற்றில் மேசையுப்பில் அடங்கியுள்ள கனியுப்பு / கனியுப்புகள் ஆவன,
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம்
(3) A, C ஆகியன மாத்திரம் (4) A, B, C ஆகிய அனைத்தும்

**5.** காயங்கள் குணமாவதற்கு மிகவும் முக்கியமான இரண்டு விற்றமின் வகைகள் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) போலிக்கமிலம், விற்றமின் C (2) நியசின், விற்றமின் D
(3) விற்றமின் A, விற்றமின் K (4) விற்றமின் C, விற்றமின் K

**6.** உணவுக் கூம்பகத்திற்கேற்ப நாளாந்த உணவு வேளையில் காய்கறிகள் அடங்க வேண்டிய பரிமாறல் அளவு எவ்வளவு?
(1) 1 - 2 அளவுகளுக்கிடையில் ஆகும். (2) 2 - 4 அளவுகளுக்கிடையில் ஆகும்.
(3) 3 - 5 அளவுகளுக்கிடையில் ஆகும். (4) 6 - 11 அளவுகளுக்கிடையில் ஆகும்.

**7.** பின்வரும் சமிபாட்டுச் சுரப்புகளைக் கருதுக.
A - இரைப்பைச் சாறு B - சதையிச் சாறு C - குடற்சாறு
மேற்குறிப்பிட்டவற்றில் புரதம் சமிபாடடைவதற்குத் தேவையான நொதியம் அடங்கிய சுரப்பு / சுரப்புகள்
(1) A மாத்திரம் ஆகும். (2) A, B ஆகியன மாத்திரம் ஆகும்.
(3) A, C ஆகியன மாத்திரம் ஆகும். (4) A, B, C ஆகிய அனைத்தும் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**8.** பின்வருவனவற்றில் பிள்ளையொருவருக்கு முதலாவது விற்றமின் A வில்லைகள் (அதி ஊட்டு) வழங்கப்படும் வயதெல்லை எது?

(1) பிறந்தவுடனாகும். (2) 6 மாதங்களுக்குப் பின்னராகும்.
(3) 1 வயதிற்குப் பின்னராகும். (4) 5 வயதிற்குப் பின்னராகும்.

**9.** கட்டிளமைப்பருவ பிள்ளை ஒருவரின் பாலியல் முதிர்ச்சிக்கு முக்கியமான போசணைப் பொருள்

(1) விற்றமின் A (2) கல்சியம்
(3) நாகம் (4) விற்றமின் $B_2$

**10.** பின்வரும் உணவுகளில், முன்பிள்ளைப் பருவப் பிள்ளைக்கு போசாக்குநிலை மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் **பொருத்தமற்ற** உணவு எது?

(1) சொக்கலற் கேக் (2) கீரைப் பிட்டு (3) பழச் சலாது (4) முட்டை புல்ஸ் ஐ

**11.** 150 cm உயரமும் 50 kg நிறையும் கொண்ட வயதுவந்த ஒருவரின் உடற் திணிவுச் சுட்டிப் (BMI) பெறுமானமாக அமைவது,

(1) 20 (2) 22 (3) 25 (4) 28

**12.** ஒரு சலாதில் காய்கறிகள் மெல்லிய கீற்றுகளாக வெட்டப்பட்டிருந்தன. இவ்வெட்டு முறை அழைக்கப்படுவது,

(1) பெய்சுன் முறை எனவாகும். (2) புருனுஸ் முறை எனவாகும்.
(3) மஸதுவான் முறை எனவாகும். (4) ஜூலியன் முறை எனவாகும்.

**13.** உணவு சமைக்கும் முறைகள் மற்றும் அம்முறைகளின் மூலம் சமைக்கப்படும் உணவுகள் ஆகியன கீழே தரப்பட்டுள்ளன. பின்வருவனவற்றில் **பிழையான** சோடியைத் தெரிவுசெய்க.

(1) நேரடி ஆவியில் அவித்தல் - லவரியா (2) நெருப்புத் தணலின் கீழ் சமைத்தல் - பலாவித்து
(3) ப்ரேஸ் செய்தல் - புடிங் (4) தட்டில் சுடுதல் - அரிசி

**14.** சிபாரிசு செய்யப்பட்ட நாளாந்தப் போசனைத் தேவைக் குறிப்பு தொடர்பான பின்வரும் விடயங்களைக் கருதுக.

A - பாலூட்டும் பருவத்தில் சக்தித் தேவையானது முதல் ஆறு மாதங்களின் பின்னர் குறைவடையும்.
B - 60 வயதிற்குப் பின்னர் கல்சியத் தேவை அதிகரிக்கும்.
C - கட்டிளமைப் பருவ ஆண், பெண் பிள்ளைகளின் புரதத் தேவை சமமானதாகும்.

மேற்குறிப்பிட்டவற்றில் சரியான கூற்று / கூற்றுகள்

(1) A மாத்திரம் (2) B மாத்திரம்
(3) C மாத்திரம் (4) A, B ஆகியன மாத்திரம்

**15.** பின்வருவனவற்றில் வீடொன்றில் நடாத்தப்படும் விருந்து நிகழ்வொன்றில் கடைபிடிக்கப்படும் பழக்கங்களில் சரியானது எது?

(1) விருந்தளிப்பவர் மேசையின் ஒடுங்கிய பக்கத்தில் அமர வேண்டும்.
(2) பிரதான அதிதி விருந்தளிப்பவருக்கு இடது பக்கத்தில் அமர வேண்டும்.
(3) விருந்தளிப்பவரும் அதிதியும் ஒரே நேரத்தில் அமர வேண்டும்.
(4) உணவு உண்டபின் பாத்திரங்களை இடதுபுறத்தால் அகற்ற வேண்டும்.

**16.** உணவுகளில் நடைபெறும் இயற்கையான மாற்றம் எனும் சுய சமிபாட்டிற்கு உதாரணம்

(1) பாண் துண்டுகளின் மீது கரும்புள்ளிகள் ஏற்படுதல்
(2) திரவப் பால் திரட்சியடைந்து இருத்தல்
(3) பழங்கள், முற்றுதல் அல்லது பழுத்த பின்னர் அழுகுதல்
(4) கத்தரிக்காய் வெட்டி வைக்கப்பட்ட பின்னர் கபிலநிறமடைதல்

**17.** உணவு நற்காப்புடன் தொடர்பான பின்வரும் விடயங்களைக் கருதுக.

A - மாங்காய்ச் சட்னி தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் வினாகிரி மூலம் pH பெறுமானம் அதிகரிக்கப்படும்.
B - மீன் புளித்தீயல் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் நற்பாதுகாப்பிற்கு பயன்படுத்துவன மிளகும் கொரக்காய்ப் புளியுமாகும்.
C - பலா மற்றும் ஈரப்பலாவை உலர்த்துவதற்கு முன்னர் வெளிறச் செய்தல் அத்தியாவசியமாகும்.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது / சரியானவை

(1) A மாத்திரம் (2) C மாத்திரம்
(3) A, B ஆகியன மாத்திரம் (4) B, C ஆகியன மாத்திரம்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**18.** கட்டிளமைப் பருவத்துடன் தொடர்பான பல கூற்றுகள் வருமாறு. இவற்றில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) முன் பிள்ளைப் பருவத்தைப் போன்றே அது வாழ்க்கைச் சக்கரத்தில் உச்ச வளர்ச்சி வேகத்தைக் காட்டுகின்ற பருவமாகும்.
(2) 'பூப்படைதல்' இளமைப் பருவத்தை அடைந்தவுடன் பெண் பிள்ளைகளிடம் மட்டும் காணப்படும் பண்பாகும்.
(3) ஆண் பிள்ளைகளின் உடல் வளர்ச்சி வீதத்தின் உச்ச காலகட்டம் 14 வயதளவில் ஏற்படும்.
(4) பெண் பிள்ளைகளில் என்புகளின் அடர்த்தி அதிகரிப்பதுடன் தசைநார் வளர்ச்சியும் துரிதமாகும்.

**19.** தெஸ்தெஸ்தரோன் ஓமோன் சுரக்கப்படுவது,
(1) விதை மூலமாகும்.
(2) சுக்கிலக்கான் மூலமாகும்.
(3) பிட்டியூட்டரி சுரப்பி (கபச் சுரப்பி) மூலமாகும்.
(4) விதைப்பை மூலமாகும்.

**20.** பிள்ளை விருத்தியுடன் தொடர்பான சரியான கூற்று எது?
(1) சுற்றாடல் தாக்கங்களினால் பரம்பரைப் பண்புகளை மாற்றியமைக்கலாம்.
(2) ஒரு குழந்தையின் மனவெழுச்சிகள் உடனடி மற்றும் நிலையான தன்மையைக் காட்டும்.
(3) ஒரு வயது முடிவில் நிறை, பிறப்பு நிறையை விட அண்ணளவாக நான்கு மடங்காகும்.
(4) கட்டிளமைப் பருவத்தில் உள வளர்ச்சி மற்றும் மொழி வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையில் தொடர்பு உள்ளது.

**21.** கோணோறியா எனும் பாலியல் மூலம் கடத்தப்படும் தொற்று தொடர்பான **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்படக்கூடும்.
(2) பாதிக்கப்பட்ட பெண்களில் சுமார் 90% மானோர் வெளிப்புற அறிகுறிகளை வெளிக்காட்டுவார்.
(3) இத்தொற்று பெண்களில் மலட்டுத்தன்மை ஏற்படக் காரணமாகும்.
(4) நுண்ணுயிர்க் கொல்லிகள் மூலம் வெற்றிகரமாக குணமாக்கலாம்.

**22.** கர்ப்பிணித் தன்மையுடன் தொடர்பான விடயங்களில் சரியாது எது?
(1) மாதவிடாய் நிறுத்தப்படுவதற்கு ஓமோன் சமநிலையின்மையும் ஒரு காரணமாகும்.
(2) கர்ப்பிணித் தாயின் குருதி ஈமோகுளோபின் மட்டத்தின் உச்ச வரம்பு ஒரு டெசிலீற்றர் குருதிக்கு 12-13 கிராம் ஆகும்.
(3) இரண்டாவது மும்மைக் காலகட்டத்தில் கால்கள் வீங்குவதும் பசியின்மையையும் வெளிக்காட்டப்படும்.
(4) கர்ப்ப காலத்தில் அதிக உயரமும் வயது கூடிய நிலையும் ஆபத்தான காரணிகள் என அழைக்கப்படும்.

**23.** முற்பிரசவ காலம் என அழைக்கப்படுவது,
(1) 34 வாரங்களாகும். (2) 36 வாரங்களாகும். (3) 38 வாரங்களாகும். (4) 40 வாரங்களாகும்.

**24.** முற்பிரசவ பிணியாய்வின்போது பல தடவைகள் செய்யப்படும் அளவீடுகள் / பரிசோதனைகள் இரண்டு
(1) Rh காரணி மற்றும் உடல் நிறை ஆகும்.
(2) இரத்த அமுக்கம் மற்றும் சிறுநீர் பரிசோதனை ஆகும்.
(3) குருதி வகை மற்றும் குருதி அமுக்கம் ஆகும்.
(4) சிறுநீர் பரிசோதனை மற்றும் Rh காரணி ஆகும்.

**25.** முற்பிரசவப் பருவம் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சூலிடலின் பின்பு முதிர்ச்சி அடைந்த சூல்கள் பலோப்பியன் குழாயின் அந்தப் பகுதியில் கருவுருகிறது
(2) கருத்தரித்த பின்னர் பிரிகை அடைந்து கருமுட்டைக் கலங்கள் (நுகம்) மொரியுலாவாக மாற்றமடையும்
(3) கருவுற்றது தொட்டு மூன்று மாதங்கள் வரையான காலகட்டம், முளையப் பருவம் என அழைக்கப்படுகிறது
(4) கருவுற்ற பின்னர் மூன்று மாதம் தொட்டு பிரசவம் வரையான காலம் முதிர்மூலவுருப் பருவம் எனப்படும்

**26.** சிசுப் பருவம் தொடர்பான **பிழையான** விடயம் எது?
(1) தலையின் சுற்றளவு சுமார் 25 cm ஆகும்.
(2) நரம்புத் தொகுதி வளர்ச்சி அடைந்திருக்காது.
(3) உடலின் நீளம் சுமார் 50 cm ஆகும்.
(4) பிறந்த பின்னர் முதல் பத்து நாட்களினுள் பிறந்த போதிருந்த நிறை சிறிதளவு குறையும்.

[பக். 4 ஐப் பார்க்க

**27.** குழந்தைக்கு வழங்கப்படும் நீர்ப்பீடன தடுப்பூசிகள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) 3 மாத முடிவில் போலியோ தடுப்பூசி - இரண்டாவது ஊட்டு வழங்கப்படும்
(2) 6 மாத முடிவில் பென்டாவேலன்ட் தடுப்பூசி - மூன்றாவது ஊட்டு வழங்கப்படும்
(3) 9 மாத முடிவில் MMR தடுப்பூசி - முதலாவது ஊட்டு வழங்கப்படும்
(4) 12 மாத முடிவில் ஜப்பானிய என்செபலயிற்றிஸ் தடுப்பூசி வழங்கப்படும்

**28.** பொருத்தொன்றைத் தைக்கும் படிமுறைகள் பின்வருமாறு.
- சிறுநூலோடல் மூலம் புடவையின் இரண்டு துணிகளைப் பொருத்துவர்.
- பொருத்தின் பின்புறப் பக்கத்தின் பாதியை வெட்டி அகற்றுவர்.
- புடவையின் இரண்டு துணிகளை விரித்து, விளிம்பாக பின்புறமாக மடித்து விளிம்புத் தையல் இடுவார்.

இம்மூட்டு வகையானது,
(1) பிரான்சியப் பொருத்து
(2) தட்டைப் பொருத்து
(3) திறந்த தட்டைப் பொருத்து
(4) மேற்செறிப் பொருத்து.

**29.** தையல் பற்றிய சில கூற்றுகள் வருமாறு,
A - விளிம்பொன்றைத் தைக்கும்போது அகலம் மாற்றமடையாமல் வைத்திருப்பதற்கு உதவும்.
B - அலங்காரத் தையலாகப் பயன்படும்.
C - அப்ளிக் செய்யும்போது அலங்காரத்தைத் தக்க வைப்பதற்குப் பயன்படும்.
மேற்குறிப்பிட்டவற்றில் பெருநூலோடலுடன் தொடர்பானது,
(1) A மாத்திரம் (2) B மாத்திரம்
(3) A, C ஆகியன மாத்திரம் (4) B, C ஆகியன மாத்திரம்

**30.** எம்ரொயிடரி செய்யும்போது 'நிரம்பு தையல்' என அழைக்கப்படும் இரண்டு தையல்கள் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) நீள்குறுந் தையல் மற்றும் பிரான்சிய முடிச்சுத் தையல்
(2) அடைப்புத் தையல் மற்றும் கம்பளித் தையல்
(3) மீள்முள்ளுத் தையல் மற்றும் முடிச்சு விஸ்பத் தையல்
(4) நீள்குறுந் தையல் மற்றும் அடைப்புத் தையல்


**31.** குழந்தை ஆடைகள் நிருமாணிப்பதுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) மாதிரியுருவின் முன்புறம் மற்றும் பின்புறம் கழுத்து ஆழம் சமமானதாகும்.
(2) வெட்டும்போது புடவையின் பிழையான பக்கத்தின் மீது மாதிரியுருவை வைத்தல் வேண்டும்.
(3) தோள் பகுதியைத் தைப்பதற்கு எளிய பொருத்தைப் பயன்படுத்துவர்.
(4) கழுத்துப் பகுதியைத் தைப்பதற்கு முன்னர் திறப்பானை தைத்து முடித்தல் வேண்டும்.

**32.** மாதிரியுருவை நிருமாணிப்பதுடன் தொடர்பான சரியான விடயமானது,
(1) நிருமாணிப்பு இரேகைகள் மற்றும் தையல் இரேகைகளை ஒரே வர்ணத்தில் காட்டுவதாகும்.
(2) நிலைக்குத்து இரேகையை அடையாளப்படுத்தல் மற்றும் வளைகோடுகளை வரைவதற்கு கைகளை சுயாதீனமாக உபயோகித்தலாகும்.
(3) வளை கோடுகள் மற்றும் நேர்கோடுகளை வரையும்போது அடிமட்டத்தைப் பயன்படுத்துதலாகும்.
(4) நிருமாணிப்பு இரேகைகள் மற்றும் தையல் விடுவெளியை முறிகோடுகளால் காட்டுதலாகும்.

**33.** ஆடையை நிருமாணித்தல் தொடர்பான சரியான கூற்று எது?
(1) புடவையின் விறைப்பை அகற்றுவதற்கு நீரில் ஊறவைத்து, உலரவிட்டு, அழுத்தியால் அழுத்த வேண்டும்.
(2) சுவடுவரை கோடுகளை அடையாளப்படுத்தும்போது புடவை மற்றும் மாதிரியுருவிற்கிடையில் காபன் தாளை வைத்தல் வேண்டும்.
(3) துணைச் சாதனங்கள் நிருமாணிப்பின்போது ஓரங்களுக்கான அலங்காரத்தைப் பயன்படுத்துதல் அத்தியாவசியமாகும்.
(4) தெறித் துவாரங்களில் நேரான விளிம்பு மற்றும் வெட்டு விளிம்புகளைத் தைப்பதற்கு தெறித் துவாரத் தையலைப் பயன்படுத்துவர்.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**34.** 

மேற்குறிப்பிட்ட வரிப்படத்தில் காட்டப்படுவது,
(1) மேற்பக்க சுருக்குக் கொண்ட பொம்மற் கைப்பாங்கு ஆகும்.
(2) கீழ்ப்பக்க சுருக்குக் கொண்ட பொம்மற் கைப்பாங்கு ஆகும்.
(3) அடிப்படைக் கைப்பாங்கு ஆகும்.
(4) மேற்பக்கமாகவும் கீழ்ப்பக்கமாகவும் சுருக்குக்கொண்ட பொம்மற் கைப்பாங்கு ஆகும்.

**35.** பிள்ளைக்கான சட்டை நிருமாணிப்புடன் தொடர்பான **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பக்கப் பொருத்தைப் பூர்த்தி செய்வதற்கு கம்பளித் தையலைப் பயன்படுத்தலாம்.
(2) கைப்பாங்கைச் சுருக்குவதற்கு சிறுநூலோடலைப் பயன்படுத்த வேண்டும்.
(3) முதுகுத் திறப்பைத் தைப்பதற்கு சரிவுத் துண்டைப் பயன்படுத்த முடியும்.
(4) கழுத்தைத் தைத்துப் பூர்த்தி செய்வதற்கு சரிவுக் கோட்டுத் துண்டு பிடித்தலைப் பயன்படுத்த முடியும்.

**36.** பின்வருவனவற்றில் குளிர் வர்ணங்கள் இரண்டைத் தெரிவுசெய்க.
(1) ஊதா மற்றும் நீலம் (2) நீலம் மற்றும் பச்சை
(3) மஞ்சள் மற்றும் ஊதா (4) பச்சை மற்றும் மஞ்சள்

**37.** குடும்பமொன்றிற்குத் தேவையான பௌதிக, சமூக, உளத் தேவைகளாவன முறையே
(1) கல்வி, உணவு, பாதுகாப்பு என்பனவாகும்.
(2) வீட்டு உபகரணங்கள், பாசம், ஆடை அணிகள் என்பனவாகும்.
(3) வீடு, தியாக மனப்பான்மை, சுகாதார வசதிகள் என்பனவாகும்.
(4) வீட்டுத் தளபாடங்கள், ஒத்துழைப்பு, அன்பு என்பனவாகும்.

**38.** பின்வரும் அம்சங்களைக் கருதுக.
A - யன்னல் கதவுகளுக்கு ஊடுகாட்டக் கூடிய கண்ணாடி பயன்படுத்தப்பட்டிருந்தமை.
B - சுவர்களில் வெப்ப வர்ணம் பூசப்பட்டிருந்தமை.
C - உட்புறமாகத் திறக்கக்கூடிய மரக்கதவொன்று பொருத்தப்பட்டிருந்தமை.

மேற்குறித்த அம்சங்களில் வீடொன்றின் வரவேற்பறையில் காணக்கூடிய சரியான கட்டமைப்பு / கட்டமைப்புகள் ஆவது / ஆவன
(1) B மாத்திரம் (2) C மாத்திரம்
(3) A, B ஆகியன மாத்திரம் (4) A, C ஆகியன மாத்திரம்

**39.** குளியலறை மற்றும் மலசலகூடத்திற்கு மிகவும் பொருத்தமான காற்றோட்ட முறை யாது?
(1) பேன்லயிட் ஆகும். (2) காற்றுத் துவாரங்கள் ஆகும்.
(3) கிறில் ஆகும். (4) இரும்பு வலைகள் ஆகும்.

**40.** அறையொன்றின் குறுக்குக் காற்றோட்டத்திற்கு உதாரணமாக அமைவது,
(1) இரு சமாந்தர சுவர்களில் கதவுகள், யன்னல்களை அமைப்பதாகும்.
(2) அருகிலுள்ள இரண்டு சுவர்களில் கதவுகளை அமைப்பதாகும்.
(3) கதவு மற்றும் யன்னல்களை ஒரே சுவரில் அமைப்பதாகும்.
(4) அருகிலுள்ள இரண்டு சுவர்களில் யன்னல்களை அமைப்பதாகும்.

* *

PAST PAPERS WIKI

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

85 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

## மனைப் பொருளியல் II

* **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு **10** புள்ளிகள் வீதமும் உரித்தாகும்.

**1.** பின்வரும் நிகழ்வை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தருக.

சமனும் துசாரியும் நகர்ப்புறத்தில் வசிக்கும் விவாகமான தம்பதிகளாகும். துசாரி முதலாவது குழந்தையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றாள். 29 வயதுடைய சமனின் உடல் நிறை 60 kg ஆகும். சமன் அரசாங்க தொழில் புரிகிறார். அவர் ஒவ்வொரு நாளும் துவிச்சக்கர வண்டியிலேயே வேலைக்குச் செல்வார். கொழுத்த உடல் நிலையில் இருக்கும் துசாரியின் தாயாரும் அவர்களுடனேயே வசிக்கிறார். அவர்களது வீடு ஐந்து அறைகளைக் கொண்டது. வீட்டின் முன்புறமுள்ள வீட்டுத் தோட்டத்தில் அவர்கள் தமது நுகர்வுக்காக சில உணவுப் பயிர்களைப் பயிரிட்டுள்ளனர்.

(i) 'கொழுத்த உடல் நிலைமை' என்பதை வரையறுக்க.

(ii) துசாரிக்கு அயடின் வழங்கப்பட வேண்டியது முக்கியமானதாகும் அதற்கான **இரண்டு** காரணங்களை எழுதுக.

(iii) சமனின் நாளாந்த சக்தித் தேவை எவ்வளவு கலோரி ஆகும்?

(iv) அவர்கள் முற்புற வீட்டுத் தோட்டத்தில் பல கீரைவகைகளைப் பயிரிட்டுள்ளனர். அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் **இரண்டு** போசணைப் பதார்த்தங்களைப் பெயரிடுக.

(v) துசாரி, பிறக்கவிருக்கும் குழந்தைக்குத் தேவையான புடைவைகள் மற்றும் ஆடைகளைத் தைப்பதற்காக தெரிவுசெய்ய வேண்டிய பருத்தித்துணி வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vi) குழந்தைக்காக அவள் தயாரித்துள்ள குழந்தை ஆடைகளின் திறப்பை மூடுவதற்கு பொருத்தமான **இரண்டு** முறைகளை எழுதுக.

(vii) மகப்பேற்றுப் பிணியாய்வின்போது துசாரிக்கு நிகழ்த்தப்பட்ட VDRL பரிசோதனையின் முக்கியத்துவம் யாது?

(viii) கர்ப்பிணிப் பருவத்தின் 12 கிழமைகளுக்குப் பின்னர் சிகிச்சையின்போது அவளுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசியைக் குறிப்பிட்டு, அது வழங்கப்படும் விதத்தைக் குறிப்பிடுக.

(ix) அவர்களது வீட்டில் காணப்படத்தக்க பல்செயற்பாட்டு வீட்டுத் தளபாடங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(x) அவர்களது வீட்டின் முன்புறத்தில் அமைந்துள்ள வீட்டுத் தோட்டத்தில் மண்ணரிப்பைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய **இரண்டு** செயன்முறைகளைக் குறிப்பிடுக.

**2.** (i) குழந்தைகளுக்கான ஆடையொன்றை அலங்கரிக்கும் **மூன்று** முறைகளை எழுதுக.

(ii) இரண்டு குறுக்குவெட்டுத் துண்டுகளை வெட்டிப் பொருத்தும் முறையை வரிப்படங்களின் உதவியுடன் குறிப்பிடுக.

(iii) மேற்புறம் அலங்காரம் செய்யப்பட்ட தழுவணை உறையொன்றைத் தைத்து பூர்த்தி செய்யும் முறையை விளக்குக.

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



3. (i) 'நாட்பட்ட குறைபோசணையை' அறிமுகம் செய்க.

(ii) நீண்ட காலமாக புரதக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தை வெளிக்காட்டும் நோய் அறிகுறிகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) பிள்ளைப் பருவத்தில் ஏற்படும் அயடின் குறைபாட்டின் தாக்கத்தை **நான்கு** உதாரணங்களுடன் விளக்குக.

4. (i) 'உணவைச் சமைத்தல் முக்கியமாகும்' அதற்கான காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(ii) வேளை உணவுகளில் அதிகளவில் காபோவைதரேற்று அடங்கி இருப்பதன் **மூன்று** தீய விளைவுகளை எழுதுக.

(iii) உணவைத் தயாரிக்கும்போது பயன்படுத்தும் 'திண்ம மாக்குழையல்' மற்றும் 'பேஸ்ரி' ஆகியவற்றை அறிமுகம் செய்க. அவை ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** உதாரணங்கள் வீதம் எழுதுக.

5. (i) வீட்டுத் தளத்திட்டமொன்றை வரையும்போது பயன்படுத்தப்படும் 'குறியீடுகள்' **மூன்றை** வரைந்து அவற்றைப் பெயரிடுக.

(ii) குடும்பமொன்றிற்கு சமூக வசதிகளால் கிடைக்கும் **மூன்று** சேவைகளை எழுதுக.

(iii) வீட்டு வேலைகளின்போது பயன்படுத்தப்படும் மனிதவளம் **அல்லாத நான்கு** வளங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் **இரண்டை** விளக்குக.

6. (i) 'இனப்பெருக்கச் சுகாதாரம்' என்பதை அறிமுகம் செய்க.

(ii) கர்ப்பிணித் பெண்ணொருவரின் போசணை நிலைமை குறித்து, முற்பிரசவ பிணியாய்விற்கு சமூகமளிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(iii) குறிப்பெழுதுக.
(a) HIV தொற்று
(b) கர்ப்பப்பை

7. (i) குழந்தையை மேலதிக உணவுகளுக்கு பழக்கப்படுத்தும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) குழந்தைப் பருவத்தில் நிகழும் மொழி விருத்தி தொடர்பாக பெற்றோர் செயற்பட வேண்டிய முறையை **மூன்று** விடயங்களினூடாக குறிப்பிடுக.

(iii) வீட்டில் சிறுபிள்ளையொருவருக்கு ஏற்படக்கூடிய **நான்கு** விபத்துக்களைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றையும் தவிர்ப்பதற்கு எடுக்க வேண்டிய செயற்பாடு ஒவ்வொன்று வீதம் குறிப்பிடுக.

***